# வாஸ்துவும் வீட்டுக்கட்டடக்கலையும்*

ஸ்ரீ.கிருஷ்ணானந்தசர்மா


**ஆய்வுச்சுருக்கம்**

*இந்துக் கட்டடக்கலை மரபில் வாஸ்துவின் பயன்பாடு பற்றிய சிந்தனை தற்போது புத்துயிர்ப்படைந்து வருகின்றது. இக்கட்டுரை வாஸ்து பற்றிய சிந்தனைகளை இலக்கியங்களினூடு நோக்குவதாக அமைந்துள்ளது.*


**அறிமுகம்**

வாஸ்து வித்தையானது பல்வேறு நிலைகளில் ஆராயப்பட வேண்டிய விடயங்களைக் கொண்டு விளங்குகின்றது. ஆலயத்தை அமைப்பது, குறிப்பிட்ட ஆலயத்தை அவ்வூரில் எவ்விடத்தில் அமைப்பது, அவ்வூரினை எவ்வாறு நிர்மாணம் செய்வது, அங்கு வீடுகளை அமைக்கவேண்டிய முறைமை, ஒவ்வொரு வீடுகளையும் அமைக்கும்போது பின்பற்ற வேண்டிய விடயங்கள் இவை எல்லாவற்றையும் விளக்குகின்ற அறிவே வாஸ்து சாஸ்திரமாகும். முதலில் ஆலயத்தை அமைத்த பின்பே அதனை மையமாகவைத்து கிராமங்களை மக்கள் குடியிருப்புக்களை அமைத்தல் வேண்டும்[1]. இவ்வாறு மக்களினுடைய வாழ்க்கை வாழ்வாங்கு அமைந்து மங்களம் நிறைந்ததாக அமைய வேண்டும் என்னும் நோக்கோடு பின்பற்றப்பட்டு வருகின்ற மரபு பூர்வமான அறிவியலே வாஸ்து வித்தையாகும்.

ஆலய அமைப்பினைப் பற்றிய விடயங்களைக் கொண்டுள்ள தேவாலய வாஸ்து என்னும் பகுதி. வாஸ்து பற்றிய பொதுவான அம்சங்களுடன் தனித்துவமான பல விடயங்களைக் கொண்டதாகவும் விளங்குகின்றது[2]. இவ்வாஸ்து வித்தையானது சமயம், ஜோதிஷம், மரபுரீதியான நம்பிக்கை, ஐதீகங்கள், தாந்திரிகம் மற்றும் இயற்கை என்பனவற்றுடன் இணைந்த அறிவாக விளங்குகின்றது. இங்கு வாஸ்து வித்தை பற்றிய விடயங்களும் குறிப்பாக வீட்டுக் கட்டடக்கலை மரபில் வாஸ்து பற்றிய பயன்பாட்டு முறைகள் வாஸ்து புருஷன், மண்டலம் ஆகிய பற்றிய விளக்கங்களும் இன்றைய நிலையில் பின்பற்றப்படுகின்ற வாஸ்து பற்றிய நிலை என்கின்ற வகையில் சில கருத்துக்களைக் கொண்டதாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

**வாஸ்து வித்யா**

ஜீவராசிகளுக்குப் புகலிடமாக அமைகின்ற இவ்வுலகினை ஆதியில் ஹிரண்ய கர்ப்பன் என்னும் புருஷன் உருவாக்கினான் என தெய்வீக வரலாறு சுட்டுகின்றது[3]. புருஷனின் அவயவங்களிலிருந்து பிரஜைகள் (மக்கள்) தோன்றிய செய்தியை இருக்கு வேதம் விளக்குகின்றது[4]. இருக்குவேத முதன்மைக் கடவுளாகிய இந்திரனுடன் தொடர்புடையவனாக வாஸ்தோஸ்பதி என்னும் தெய்வம் கூறப்படுகின்றான்[5]. பிரமாவினால் படைக்கப்பட்ட

இவ் உலகின் உருவாக்கத்திற்கு துவஷ்டா முக்கியமானவனாகக் கருதப்படுகின்றான்[6]. இவ்வாறு இவ்வுலகப்படைப்பிற்கு ஒரு புருஷ சம்பந்தமான கருத்துநிலை காணப்படுகின்றது.

மூவுலகினையும் படைத்தவராகிய சிவபிரான்[7] யசுர்வேத சதருத்ரீயத்தில் மனையைக்காக்கின்ற வாஸ்து புருஷனாகக் கூறப்படுகின்றான்[8]. பிரம்மாவின் நான்கு முகங்களிலிருந்தும் உலகினைப் படைக்கின்ற கலைஞர்கள் மரபு உண்டாகியது[9]. சிருஷ்டிக்குக் காரணமான பிரமா தெய்வீக மரபினைவிடக் கலைமரபில் முக்கியத்துவம் உடையவராக விளங்குகின்றார்[10].

'வஸ்' என்னும் வினையடி வசித்தல் என்னும் பொருளுடையது. உயிர்கள் வசிப்பதற்குரிய இடம் பூமி. தேவர்களும் மனிதர்களும் எந்த இடத்தில் வசிக்கின்றார் களோ அவ்விடங்கள் 'வஸ்துக்கள்' என அழைக் கப்படுகின்றன. வஸ்துவானது பூமி, பிராஸாதம், யானம், சயனம், என நால்வகைப்படும்[12]. இப் பூமியானது ஏனைய மூன்றிற்கும் ஆதாரமான முக்கியமான வஸ்துவாகும்[13]. இவ் வஸ்துக்களைப் பற்றிய விடயங்களைக் கூறுகின்ற அறிவுநூல் 'வாஸ்து வித்யா' எனப்படும்[14].

இவ்வாஸ்து சாஸ்திரமானது திட்டமமைத்தல்[15] ஒரு பிரயோக முறைமையான கணித அளவீட்டுப்பகுப்பு முறைமைகள் என அழைக்கப்படும்[16]. படைப்புச் செயலும் ஓர் ஒழுங்குக்கு உட்பட்டதே[17].

## வாஸ்துபுருஷனின் உற்பத்தி

வாஸ்து புருஷனானவன் ஒரு பூதப் பொருள் வடிவினன் ஆவன். இவனது தோற்றம் பற்றி ஓர் தெய்வீகவரலாறு கூறப் படுகின்றது[18]. உலகினைத் தோற்றுவித்த பிரமாவானவர் படைப்பினைத் திட்டமிட்டபடி ஆற்றுவதற்காக வாஸ்துபுருஷன் எனும் அண்டப்படைப்புக் காவலனையும் தாமே உண்டாக்கினார்.[19] இப்புருஷன் அனைத் திற்கும் மூல காரணமாகவும் தெய்வத்தன்மை பொருந்திய முதன்மையான இயக்கும் கருவியாக பூமியோடு தொடர்புடையவனாகவும் கொள்ளப் படுகின்றான்[20].

## வாஸ்துபுருஷனின் வடிவம்

பூமியில் ஆறு முதுகெலும்புகளுடனும் நான்கு மர்மங்களுடனும் நான்கு நிரைகள் – நரம்புகள் இருதயம் இவற்றோடு கூடியனவாக கிழக்கிலே தலையை யுடையவனாகக் கூனல் முதுகுடன் இருப்ப வனாகவும் இவனது வடிவம் கற்பிக்கப்படுகின்றது.

## வாஸ்துபுருஷனின் இருப்பு

இவன் அந்தந்த மாதங்களுக்குரிய இராசியில் காலை நீட்டி அதற்கு எதிரான ஏழாம் இராசியில் தலையை வைத்து இடது கை கீழும் வலது கை மேலுமாகக் கீழ்நோக்கிப் படுத்திருப்ப வனாகவும் கூறுப்படுகின்றான்; (விளக்கப் படம் –1)

அவனுடைய இருதயத்தில் பிரமாவும் ஏனைய தேவதைகள் தத்தமக்குரிய அங்கங்களிலும் வசித்துக் கொண்டு பிரமாவை – மத்தியிலே நோக்கியவர்களாக விளங்குகின்றனர் (விளக்கப்படம் – 2).

## அண்டமும் வாஸ்துவும்

இப்பிரபஞ்சத்தின் போக்கிற்கு ஆதாரமானவன் சூரியன். பூமியினுடைய கால நிர்மாணங்களுக்கும் இவனே ஆதாரம். இங்கு

வாஸ்து புருஷனின் இருப்பானது சூரியகிரகச் சாரத்துடன் தொடர்புடைய ஓர் அம்சமாக முக்கியமாக விளங்குகின்றது. சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசியில் வசிக்கிறார். இதனடிப்படையில் மாதம் முதலான காலநிர்ணயம் ஏற்படுகின்றது. இங்கு சூரியன் இருக்கின்ற இராசியிலே காலை வைத்தவனா கவும் சூரியனுடைய சஞ்சாரத்திற்கு ஏற்றவாறே இவனுடைய இருப்பு நிலையும் கொள்ளப்படுவது நோக்கத்தக்கதாகும். இதனடிப்படையிலே நான்கு திக்குகளுக்குரிய மாதங்களும் வீடு கட்டுவதற்கும் குடிபுகுவதற்கும் சிறந்த மாதங் களாகவும் நான்கு விதிக்குகளுக்குமுரிய மூல மாதங்கள் விலக்கப்படுவதும் கோள்களின் நிலையோடும் ஈர்ப்பு சக்தியுடனும் வாஸ்துபுருஷ இணைப்பையும் ஜோதிஷத்தின் இணைப்பையும் குறிப்பாக விளக்கிநிற்கின்றது.

வஸ்துவானது அருவம். இது நிஷ்கள மானது. அனுபவப் பொருளாகும். இதனை ஒளிப்பொருள் (Luminous form) என்பர். வாஸ்து சகளம் பிரதிரூபமானது. இது ஒலிப்பொருள் எனப்படும். ஒளிமயமான அகக்காட்சியை கண்டபின்பே ஒலிக்காட்சி யாகிய சொல் பிறக்கின்றது[21]. ஆன்மப் பொருளில் காலூன்றித் தொடக்கமுற்ற இந்து விஞ்ஞானம் From subtle to gross என்ற முறையில் வளர்ச்சியுற்றது. gross to subtle subtle to gross என்னும் தன்மையையே வாஸ்து விஞ்ஞானமும் உணர்த்துகின்றது. மேலை நாட்டு விஞ்ஞானம் gross to subtle என உணர்த்தி நிற்பதான அயன் ஸ்டீனின் கொள்கையும் நோக்கத்தக்கது. மேலும் This is the scientific truth behind and becoming non manifest becoming Manifest என்ற கூற்றும் குறிப்பிடத்தக்கதாகும்.

"ஓம் ஒலி கேட்டுணர்ந்தால் உள்ஒளி ஞானம் தோன்றும் ஓம் ஒளி கண்டுணர்ந்தால் ஒளிஒளிர் உருவே தோன்றும். ஒளிஒளிர் உருவந்தானே ஆடலான் ஆடலாகும்" இவ் ஆடலே பிரபஞ்சத்தியின் இயக்கக்கூத்து ஆகும். இவ்விதம் சூக்குமத்தைத் தூலமாக்கி சூக்குமத்தை ஸ்தூலத்திலேயே கண்டு களித்திட வழிவகை செய்வதே வாஸ்து விஞ்ஞானத்தின் சாதனையாகும்.

### வாஸ்துபுருஷன் பற்றிய சில கருத்துக்கள்

இந்துக்கள் வருடந்தோறும் வீடுகளைப் புனர்நிர்மாணம் செய்து மெருகூட்டி சடங்குகள் செய்து தீபாவளிப் பண்டிகையைக் கொண் டாடுவர்[22].

மஹாபலன் எனும் அசுரனை வாஸ்து புருஷனாக விளங்கச் செய்த நாள் புரட்டாதி மாத கிருஷ்ணபக்ஷதினம் என்னும் கருத்து மனை நூல்களிலிருந்து பெறப்படுகின்றது[23]. நரகாசுரன் என்பவனுக்கு வரம் கொடுத்த நாளாக தீபாவளி விளங்குவது பற்றிய புராண மரபும் உண்டு. வருடந்தோறும் வீட்டில் நிகழும் குற்றங்களை நீக்குவதன் பொருட்டு வாஸ்து ஹோமம் நிகழ்த்துதல் வேண்டும்[24]. எனக் கூறப்படுகின்றது.

கிருஹ்ய சூத்திரங்களுக்கு ஏற்ப நிகழ்த்தப் பெறும் 'ஆக்ராயணி' என்னும் கிரியையானது மார்கழி மாதப் பூரணைநாளில் வருடந்தோறும் வீட்டினைப் புனர்நிர்மாணம் செய்து நிகழ்த்தப்படுவதாகும்[25]. தேவர்களின் இராக்காலமாகிய தக்ஷிணாயன முடிவில் தேவர்கள் விழிப்படையும் உத்தராயண காலத்தில் மக்கள் சந்தோஷமாக வாழ்வதற்காக இச்சடங்கு நடாத்தப்படுகின்றது.

இங்கு இவ்அம்சமானது முன் குறிப்பிட்டவாறு சூரியனுடைய போக்கிலே வாஸ்துபுருஷன் சஞ்சாரம் செய்கின்ற தன்மை யுடன் நோக்கக்கூடியதாக அமைகின்றது.

**வாஸ்துபத விந்யாசம்**

பூமியிலே உள்ள வாஸ்துபுருஷனின் நிலை யைப் பதங்களாக உரியவாறு வகுக்கப்படுகின் றது. இம் முறையானது ஒரு கட்டடம் ஆரம்பிப் பதற்கு முன்பாக ஒரு வரைபட மாதிரியைத் தயார் செய்வது போன்றதொன்றாகும். உரியவாறு மக்களுடைய வாழ்விடங்களைத் தேர்ந்து எடுக்கப்படுவதற்குரிய ஓர் மாதிரி அமைப்பாக இப்பதங்கள் விளங்குகின்றன[26]. (விளக்கப் படம் – 3).

இவை ஒரு பதம் முதல் பல பதங்களைக் கொண்டவையாக முப்பத்திரண்டு வகையாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் அறுபத்து நான்கு பதமுள்ள மண்டுகபதமும், எண்பத்து ஒரு பதமுள்ள பரமசாயீபதம் என்னும் சண்ட பதமும் சிறந்த அமைப்புக்களாகக் கூறப் படுகின்றது[27]. இவை கிராமம், வீடு என்ப வற்றினமைப்பின்போது பின்பற்றப்படுவது சிறந்ததாகும். இங்கு பதங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளவற்றில் ஒற்றை எண்ணிக்கையில் விளங்குவன ஸ்தீரி அம்சமாகவும் இரட்டை எண்ணிக்கையில் விளங்குவன புருஷ அம்சமாகவும் கூறப்படுகின்றன[28].

இங்கு முன்வைக்கப்படுகின்ற வாஸ்து பதமானது கோணங்கள், பதங்கள், சந்தி அமைப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு விளங்குவதும் பலியிடுதல் மற்றும் பலிப்பொருளை ஒரு கன்னிகைக்கு வழங்க வேண்டும்[29]. என்கின்ற கருத்தும் தாந்திரிக முறைமையுடனும் யந்திர வழிபாட்டு அம்சங் களுடனும் இணைந்த இவற்றின் தன்மையைப் புலப்படுத்துகின்றது எனலாம்.

**வீட்டுக்கட்டடக்கலை**

இந்துக்களின் வாழ்க்கை நான்கு படி நிலைகளாக வகுக்கப்பட்டுள்ளது. இவை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரத்தம், சந்நியாசம் என்பனவாம். இவற்றில் இல்வாழ் பவன் மற்றைய மூன்றுபடி நிலைகளிலுமுள்ளவர் களைப் போஷிக்கும் தர்மத்தை மேற்கொள் கின்றான். எனவே இந்து தர்மத்தைப் பேணுவதற்கு இல்வாழ்பவனும் அதற்கு ஆதாரமான இல்லிடமும் சிறப்பானதாக அமைதல் வேண்டும்.

'ருணானு பந்தரூபேண பசு பத்னீ சுதாலயா' பசு – செல்வம், பத்னீ – மனைவி, சுதன் – பிள்ளை இவைகளை அனுபவிப்பதற்கும் இல்லிடம் இன்றியமையாததாகும். இவ் இல்லிடமானது ஒருவன் இகபர சுகங்களை அனுபவிப்பதற்கும் சாதனமாக அமைகின்றது. கலைகளுக்கு எல்லாம் தாய் போன்று விளங்குவதும் அறுபத்திநான்கு கலைகளுள் ஒன்றாக விளங்குவதுமான கட்டடக்கலை யானது பண்பாட்டின் குறியீடுகளாக விளங் குகின்ற சிறப்புடையது. இது வடிவமைப்பையும் இடத்தையும் இணைத்துப் பண்பாட்டின் தெளிவான புறவெளியீடாக அமைகின்றது. மனிதன் கைவண்ணத்தைக் காட்டுவதே பண்பாடு, மனிதன் தன் தேவைகளை நிறைவு செய்வதற்கு உருவாக்கிக் கொண்டதே பண்பாடு எனப்படும். ஓர் இனத்தின் பண்பாடு அந்நாட்டின் இலக்கியம், வரலாறு, சமயம், சமூகம், கலை அறிவியல் என்பவற்றின் மூலம் விளக்கமுறுகின்றது. ஆதியில் நாடோடியாகத் திரிந்த மனிதன் உணவுப் பொருட்களை வேளாண்மை செய்கின்ற நிலைக்கு வந்தபோது

ஓரிடத்தில் தங்கி வாழத் தலைப்பட்டான். நாகரிகமடைந்த அவன் உணவு, உடை, உறையுள் என்பவற்றை நிலையாக உள்ளனவாக ஆக்குவதற்கு எண்ணித் தனது குடும்பத்துடன் வாழ்வதற்குப் புகலிடம் அமைத்துக் கொள்ள முற்பட்டான்.

இந்நிலையில் பலருடன் சேர்ந்து வாழும் முறைமை ஏற்பட்டது பல வீடுகள் அமைந்தன. ஊர்கள் உருவாகின.

பொதுவாகக் கட்டடத்தின் அமைப்பானது அதனை அமைக்கும் பொருட்களிலும், முறைமைகளிலும் ஒரு படிப்படியான வளர்ச்சி நிலையினூடு இடம் பெற்றது. புகலிடம் அமைத்துக்கொள்வதில் அனுபவத்தின் பயனாக பல முன்னேற்றங்களும், திருத்தங்களும் உருவாகின. இல்லிடம் அமைக்கும்போது சில வரன்முறைகள் பின்பற்றப்பட்டன. மக்களால் பின்பற்றப்பட்ட இவ்வரன் முறைகள் அறிவியல் வடிவில் காலப்போக்கில் தோன்றியிருக்கக் கூடும்.

மக்களுடைய வரலாற்றின் போக்கினை நிர்ணயிக்கின்ற காரணிகளின் தன்மையினைப் பொறுத்து வரலாறானது தன்மையடிப்படையில் வேறுபட்டு விளங்குவதை அவதானிக்கலாம். ஆசிய நாடுகளில் காணப்படும் பண்பாட்டின் வரலாற்றுப் போக்கானது பெரும்பாலும் சமயக் காரணிகளின் அடிப்படையில் அவற்றின் செல்வாக்கினால் நெறிப்படுத்தப்பட்ட ஒன்றாகவே காணப்படும். தொன்றுதொட்டு வந்த வரன் முறைகளும் நம்பிக்கைகளும் இணைந்து மக்களினுடைய வாழ்வில் பலவகைகளில் நிலை பெற்றிருந்தது. சமயச் சார்போடு இணைந்த இக்கலைகள் சமயத்தெளிவினுடைய வெளித் தோற்றங்களாகக் கொள்ளப்படுகின்றன.

ஓர் இல்லிடம் அமைக்கின்றவிடத்திலே கட்டடக்கலை, தச்சுக்கலை, ஜோதிஷம், சகுனம், நிமித்தம் முதலிய சாஸ்திரங்கள், சிற்பம், ஓவியம் எனப்பல கலைகள் தொடர்புபடுகின்றன.

அறிவு நூல்களைச் சாஸ்திரம் என்பர். சிற்ப சாஸ்திரம், நாட்டிய சாஸ்திரம், காம சாஸ்திரம், கூபசாஸ்திரம் எனப் பலவாறு சாஸ்திரங்கள் இந்தியமரபில் விரிந்துள்ளன. கட்டடத்திற்கு மனையைத் தேர்வு செய்வது முதல் மரத்தைத் தேர்வது, கிணறு அமைத்தல் முதலிய எல்லா வற்றிற்கும் சிற்ப நூல் மரபுகள் உண்டு. இவை வீடுகட்ட நிலம் தேர்ந்து எடுத்தல், மனை அமைக்க காலநேரம் பார்த்தல், நிலைக்கால், வாசற்கால் என்பன வைக்க நல்ல நேரம் குறித்தல், குடிபுக நேரம் எடுத்தல், பொருத்தமான இடங்களில் கட்டடக்கூறுகளை அமைத்தல், மனைகோடலின் போது நிமித்தம், சகுனம் என்பன பார்த்தல் என்பன பற்றி எல்லாம் கூறுகின்றன.

இவ்வளர்ச்சி நிலையில் இறைவனுக்கும், அரசனுக்கும், சிறப்பான இடங்களில் சிறப்பான முறையில் வாழ்விடம் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தினால் முறையே கோவில்களும், அரண்மனைகளும் மிகப் பெரியனவாகவும், சிறப்பானவையாகவும் அமைந்தன. கோவில்கள் அரண்மனைகளையடுத்து செல்வந்தர் வாழ்ந்த மாடமாளிகைகள் பற்றியும் அறியக்கூடியதாக இருப்பினும் தனிமனிதனின் வீடுகள் பற்றியும் இலக்கியங்கள் கூறுகின்றன. அவற்றின் அமைப்பு விதிகளை மனையடி சாஸ்திரம் முதலிய நூல்கள் விதித்துரைக்கின்றன. இவற்றிலி ருந்து இடம், பொருள், ஏவல் என்பவற்றிற்கு ஏற்ப அமைந்த வீடுகளின் வரைவுகளை அறிய முடிகின்றது.

பொதுவாகக் கட்டடக்கலை அறிவினை வடமொழியில் வாஸ்துவித்யா என அழைப்பர். மேலும், வாஸ்து பற்றிய மனை அமைத்தலின் போது கவனிக்கப்பட வேண்டிய விடயங்களை சிற்ப நூல்கள், ஆகம நூல்கள், ஜோதிஷ நூல்கள் என்பன ஒன்றோடொன்று தொடர்பு படுத்தி விரிவுபடுத்துகின்றன. சிற்ப சாஸ்திரம் என வழங்கப்படுகின்ற மணிப்பிரவாளத்தமிழில் அமைந்த நூலானது 1,400 பாடல்களைக் கொண்டது. இது மயமதம் எனும் நூலை அடிப்படையாகக் கொண்டு பழஞ்சுவடிகளிலிருந்து திரட்டப்பட்டது. இந்நூலே காலப்போக்கில் மனையடி சாஸ்திரம், மனைநூல் என வழங்கலாயிற்று.

இல்லிடம் அமைப்பதற்கு ஆரம்பிப்பதற்கு ஜோதிஷ ரீதியாக நல்ல நேரம் தீர்மானிக்கப் படுகின்றது. புறப்படும் வேளையில் நிகழுகின்ற சகுனம் – நிமித்தம் என்பன கருத்தில் கொள்ளப்படுகின்றது. பின்பு இல்லிடம் அமைகின்ற பூமியானது அதன் கண் உள்ள மரங்கள், வசிக்கின்ற மிருகங்கள், பறவைகள், மண்ணின் அமைப்பு, அதன் தன்மை, வாசனை, சுவை முதலியவற்றால் பன்னிரண்டு விதமாகப் பாகுபடுத்தப்படுகின்றது. இவ்விதம் பூபரிசைஷ செய்து பின் பூமியிலிருந்து துஷ்ட தேவதைகளை விலக்குவதற்கு பிரவேசபலி எனும் கிரியை செய்யப்படுகின்றது. பின்பு பூமியைச் சமப்படுத்தும் செயல் நடைபெற்று உரிய வேளையில் சங்குஸ்தாபனம் செய்யப்படுகின்றது.

பூமியின் சுற்றளவிற்கு ஏற்ப உரிய வகையில் ஆயாதி நிர்மாணம் செய்யப் படுகின்றது. பின்பு வாஸ்துபத விந்யாஸம் எனப்படும் நிலவரைவு இடம்பெறுகின்றது.

இங்கு ஒன்பது பதம் கொண்ட மத்தியிலுள்ள பிரம பதத்தைத் தவிர்ந்த வெளிச்சுற்றிலுள்ள பதினான்கு தைவபதங்களையும் தவிர்த்து அடுத்த சுற்றிலுள்ள இருபத்துநான்கு பதங்கள் மானுஷ பதங்கள், இப்பகுதியே வீடுகள் அமைப்பதற்கு உரிய வகையில் தேர்ந்து எடுத்தல் வேண்டும். இவையே வாஸ்து சாஸ்திரப் பிரகாரம் மனிதர்கள் வாழ்வதற்குரிய பிரதேசமாகும். கிராம நகர அமைப்பில் இருபதில் ஒரு பகுதியாக மானுஷபதம் கொள்ளப்படுகின்றது. வாஸ்து பதவிந்யாசம் எனும் செயன்முறைவரை தேவாலய வாஸ்துவிலும், வீட்டினை அமைப்பதிலும் பின்பற்றப்படுகின்ற விடயங்கள் ஒரே விதமானவையேயாகும்.

நூல் வல்லுநர்கள் மனை அமைப்பதற்கு பதினொரு விதமான பொருத்தமான விடயங்களைக் கூறியுள்ளனர். மனை அமையும் பூமியானது கிழக்கு வடக்காக உடைய சூரியபூமி தாழ்ந்ததாகவும் தெற்கு மேற்காக உடைய சந்திர பூமி உயர்ந்ததாகவும் இருத்தல் சுபத்தைத் தரக்கூடியது.

மேலும் மனை கோலுபவருடைய இராசிக்கு ஏற்றவாறும் வாஸ்து புருஷனுடைய இருப்பு நிலையைப் பொறுத்தும் வீட்டினுடைய வாயில் தீர்மானிக்கப்படுகின்றது. குறிப்பிட்ட வாஸ்துபத வின்னியாசத்தின் மூலம் ஈசானதிக்கில் வடகிழக்கில் வழிபாட்டு அறையும் மற்றும் உரிய இடங்களில் கிணறு சமையலறை என்பனவும் தீர்மானிக்கப் படுகின்றன.

கிருஹ்ய சூத்திரங்களிலும் வீடுகள், அவற்றின் பாகங்கள் பலவாறு அமைந்த தன்மை[31] கூறப்படுகின்றன. குறிப்பிடப்படுகின்ற இடங்களில் அமைவதால் ஏற்படும்

நற்பலன்கள்[32] பற்றியும் விளக்குகின்றன. சிவாகமங்களும் கிராமாதி லக்ஷண விதிப் படலத்தில் கிராமங்களின் அமைவிடத் தோடு திட்டமிடப்பட்ட வீட்டமை விடங்களை அக்ர ஹாரம், நகரம், பட்டணம், கர்படம், புரம், கேடகம் குடிகம், சிபிரம், ராஜதானி, சேனாமுகம், சுத்திரம் என வகைப்படுத்திக் கூறுகின்றன. வீடுகளின் அமைவிடம், தன்மை என்பவற்றைப் பொறுத்து வீடுகள் சாந்திகம், பௌஷ்டிகம், ஜயதம் கனம் அத்புதம் என வகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. ஜோதிஷநூல்களிலும் வீடுகட்டும் முறைமை நிலையம் அமைத்தல், நீர்நிலைகள் அமைத்தல், ஒருவருடைய கிரகநிலையைப் பொறுத்து அவருக்கு எப்படிப்பட்ட மனை அமைய வேண்டும். வீட்டின் வாயில்கள் பிரதான வாயிற் கதவு என்பவற்றின் அமைவிடம் பொருத்தமாக அமைவதால் ஏற்படும் நன்மை கள், மாறுபட்டால் உண்டாகும் தீமைகள் என்பன பற்றி எல்லாம் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

மனைநூல் கூறுகின்ற விடயங்கள் பற்றியும் கோலளவு, நூல்பிடித்தல், வாஸ்து தேவதை, திசைக்கடவுளர் இவர்களின் நிலை யறிந்து வீடுகட்டும் மரபு என்பன பற்றியும் நெடுநல்வாடை, கலித்தொகை, சீவகசிந்தா மணி, நற்றிணை, மதுரைக்காஞ்சி, சீலப்பதி காரம் என்னும் தமிழ் இலக்கியங்களும் எடுத்துக் கூறுகின்றன[33].

வீட்டிற்குப் புறம்பாக அமைய வேண்டிய அறைகள் மற்றும் அமைவிடங்கள் பற்றியும் சிற்ப நூல்கள் விரிவாக எடுத்துரைக்கின்றன. மனையினுடைய பாகத்தை ஒன்பது பாகமாக்கி அதில் சந்திரன் அல்லது புதனுடைய அம்சத்திலே வாசல் நிலைவைத்தல் நன்மை பயக்கும் எனவும் வாசலானது கிழக்கு மேற்காக நீளமாகவும் தலைவாசலின் உயரத்திற்குக் கூடியதாக உள்வாசல்கள் அமைவதும் சிறப்பானதாகக் கூறப்படுகின்றது. வாஸ்து புருஷனின் வயிற்றுப்பகுதியிலேயே வாசல் அமைய வேண்டும் என வாஸ்து சாஸ்திரம் கூறுகின்றது. வாயிலின் அமைப்பு, பயன்படுத்தப்படும் மரங்கள், கதவுகள், என்பன பற்றியும் வாசலின் அமைப்பு, அதனை மூடித்திறக்கும் போது ஏற்படும் ஒலி நிலை என்பன வும் அவற்றின் பலன்களும் கூறுப்படுகின்றன.

வாசல் நிலைக்கதவின் மேல் குறியீடுகள் அல்லது உருவங்கள் அமைக்கும் மரபும் நோக்கத்தக்கதாகும். Dr.N.Sukal இதனை ஓர் அலங்கார முறைமை நிகழ்வு என குறிப்பிடுகின்றார். எனினும் இந்துப் பண்பாட்டு மரபில் இதற்கு ஒரு தனித்தன்மை காணப் படுகின்றது. கிருஹ்ய சூத்திரங்களிலும் இவ்வாசல் அமைக்கும் முறைமை முக்கியமாகக் கவனிக்கப்பட்ட ஓர் அம்சமாகும். அத்துடன் கதவின் மேல் பாகத்தில் தாமரைமலர் அமைந்த தன்மை பற்றியும் அறிய முடிகின்றது. வளர்ச்சி நிலையில், இத்தன்மை மஹாலஷ்மி மற்றும் இஷ்ட தெய்வங்களின் உருவங்கள், பூரண கும்பம் எனப்பலவாறாகக் காணப்படுகின்றன. தமிழிலக்கியங்களிலும் இம் மரபு பற்றிக் கூறப்பட்டுள்ளது. இந்துப் பண்பாட்டு மரபில் அக வணக்கத்தைக் குறிப்பதாக இத்தன்மை விளங்கிவருவது குறிப்பிடத்தக்கதாகும்[34]. மேலம் சாஸ்திர முறைப்படி அமைந்தவீடுகள் அவைகளின் வாழ்நாள் காலங்கள் பற்றிய கருத்துக்களும் மனைநூல்களில் கூறப்பட் டுள்ள மையும் நோக்கத்தக்கதாகும்.

**முடிவுரை**

மூலபிம்பத்தின் மூலக்கணக்கின் அடிப்படையில் உருவாக்கப்படுவதால் வாஸ்து மரபுப்படி உருவாகும் வடிவங்கள் அனைத்தும் கட்டடங்கள் உட்பட விஞ்ஞானவடிவங்க ளேயாம். விண்வெளியிலே பரந்து விரிந்து கிடக்கும் சக்தியானது தன்னைத்தானே ஓர் ஒல்லைக்குள் கட்டுப்படுத்திக் கொண்ட விந்தை இது. இதனைக் கண்டு சொன்னது வாஸ்து விஞ்ஞானம். இறையின் Primal materialised Manifestation ஒரு சதுரம் இதனைக் கண்டுசொன்னவர் மயன் என்பவர்.

இவ்விதமாக அறிவியல் பூர்வமாகவும் பண்பாட்டினடிப்படையிலும் வளர்ச்சியடைந்து வந்த வீட்டுக் கட்டடக் கலையானது மக்கள் வாழுகின்ற சூழலினடிப்படையிலும், உணர்ச்சி மயமாக விளங்கிடும் அகவெளியே இடமாக அல்லது இடவடிவமாக (Space into spatial form) உருவமாற்றம் பெறுவதால் ஒவ்வொரு கோலத்தின் லாவண்யத்தை ஒருவகையான அழகியல் வாயிலாக அதாவது உணர்ச்சிமய மான பூரண அழகை இலஷணத் தைக் கொண்டு இலஷியத்தை அடைய, மன உணர்வுகளினூடும் கலையம்சங்கள் பொருந்திய வடிவமைப்புக்களுடனும் இணைந்து சிறப்பான ஓர் இலக்கண முறைமையினூடு வளர்ச்சி பெற்றுள்ளது. இங்கு அளவியலும் அழகியலும் சங்கமித்துள்ளன.

தற்கால வழக்கில் வாஸ்து மரபுகளின் நம்பிக்கையோடு கூடிய அடிப்படைகள் ஒரு மீள் உணர்வு பெற்று அதற்குரிய செல்வாக்கினைச் செலுத்தி வருகின்றமை மனங்கொள்ளத்தக்க தாகும்.

## அடிக்குறிப்புகள்

1 "கேகாரம்பாத் புரா அமர வாஸஸம்" – **மயமதம்** – அத்–7; பாடல் 84.

2 **Devalaya Vastu**

3 "ஹி ரண்ய கர்ப்பஸ்ஸமவர்த்தாக்ரே பூதஸ்யஜாத பதிரேக ஆஸித்" – **இருக்கு வேதம்** X 121–1.

4 **இருக்கு வேதம்** – X 90-12

5 **இருக்கு வேதம்** – VII 54-55

6 **இருக்கு வேதம்** – X -6. 13-14

7 Lord siva he Architect of al the three worlds - **Vastu Sastra** - Dr. N.Sukal

8 "வாஸ்துபாயச"– **யசுர் வேதம்** – சதுருத்தியம் – 7.2.5.

9 பிரம்மாவின் நான்கு முகங்களிலிருந்து ஸ்தபதி சூத்ரக்கிராகி, தக்ஷகன் முதலியோர் தோற்றம் பெற்றனர்.

10 உருவ வழிபாட்டில் பெரும்பாலும் இடம்பெறா விடினும் கலை மரபு பற்றிய விடயங்களில் முதன்மையானவராக வழிபடப்படும் நிலையை உடையவர்.

11 "ஏதேகஹ் ரீதம் சர்வம் வசுஹிதமேதே ஹ்ரீதம் சர்வம் வாசயந்தே தத்யாதிதம்சர்வம் வாசயந்தே தஸ்மாத் சர்வம் இதி" – உயிர்கள் வசிக்கும் இடத்திற்கு வசு என்று பெயர் **சதபதபிராம்மணம்** – 14, 6, 7, 4

– "பூமிராவபனம் மகத்"– பூமியானது எல்லா வஸ்த்துக்ளையும் அடக்கிக் கொண்டிருக்கின்ற பெரிய பாத்திரம் – **மகாபாரதம்** – வனபர்வம் 5,11,1

– House, fields, gardens, building to any kinds lakes and tanks are each vastu- **Kautilliya Artha Saatra** - chab - LXBV-p.166.

12 பூமிப்சாத ஜாநாகி சயனம் ச சதுர்வதிம் – **மயமதம்** – அத் – பாடல் 2

13 "ப்ராஸாதாதீனி வாஸ்தூனி வஸ்துத்வாத் வஸ்துசம்ஸ்ரயாத்/வஸ்தூன்யேவறி தான்யேவப்ரோக்தான்யஸ்மின் புராதனை: // **மயமதம்** 2.5

14 "விமானாதீனி வாஸ்தூனி வஸ்துன; வஸ்துசம்ஸ்ரயாத்/ தான்யேவ வஸ்துரேவதி கதிதம்வை வஸ்து வித்புதை// – **மானசாரம்** 5.3 – வாஸ்துரேவவஸ்து.

15 Vastu is Planning creation and planning must go to getter creation of the world and its planning are twin sisters.

- Vastu sastra may be called applied astronomy.